(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**.208/2017 அ.சா.14

Name : விஜயேந்திரன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 08-02-2023.

A1 absent. A2, A3, present. U/s 317 Cr.P.C petition filed and allowed.

முதல் விசாரணை:-

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.11.2014 ம் தேதியன்று நாகமலை புதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.436/2014 சம்பந்தப்பட்ட வழக்குச் சொத்துக்கள் நீதிமன்ற முத்திரையுடன் கூடிய ஒரு மரப்பெட்டியில வைத்து நீதிமன்ற கடிதத்துடன் எங்கள் ஆய்வகத்தில் உயிரியல் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது. அந்த மரப்பெட்டியில் இருந்த வழக்குச் சொத்துக்களான 1. சிறிய கற்களுடன் கூடிய மணல், (தார் கற்கள்) 2. சிறிய கற்களுடன் கூடிய மணல் (தார் கற்கள்), 3. சுமார் 33 செ.மீ நீளமுள்ள கத்தி, 4. சுமார் 10 கி.கி எடையுள்ள ஒழுங்கற்ற வடிவமுடைய கல், 5. மஞ்சள் நிற டீசர்ட், 6. கிரே கலர் பேண்ட், பழுப்புநிற பெல்ட்டுடன் கூடியது, 7. கருப்புநிற மஞ்சள் டிசைன் போட்ட ஒரு ஜோடி செருப்பு மேற்கண்ட சொத்துக்களை பகுப்பாய்வு மேற்கொண்டதில் வரிசை எண்கள்.1 மற்றும் 3 முதல் 7 வரையிலான சொத்துக்களில் இரத்தம் கண்டறியப்பட்டது. வரிசை எண்.2 ல் இரத்தம் இல்லை என்ற உயிரியல் அறிக்கை நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நான் அனுப்பிய உயிரியல்பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.**7. மேலும், இரத்தம்பட்ட பொருட்களின் பகுதிப்பொருட்கள் அவற்றின் இனம் மற்றும் வகை அறியும் பொருட்டு குருதிவடிநீரியல் பிரிவில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. வரிசை எண்.1 மற்றும் 3 முதல் 7 வரையிலான சொத்துக்களில் இருந்து இரத்தம் மனித இரத்தம் என்று அவை அனைத்தும் O வகை இரத்தப்பிரிவைச் சார்ந்தது என்ற குருதிவடிநீரியல் அறிக்கை நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி குருதிவடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ.**8. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

கைப்பற்றப்பட்ட இரத்தம்பட்ட பொருட்களின் புலன்விசாரணை அதிகாரியால் எந்த தேதியில் கைப்பற்றப்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் எதையும் நான் பார்வையிட்டேனா என்றால் எனக்கு அதுகுறித்து எதுவும் அனுப்பபப்படவில்லை. நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட இந்த வழக்கு சம்பந்தமான சொத்துக்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்குவதே என்னுடைய பணி ஆகும். எந்த அயிட்டம் என்ன வகைப்பொருள் என்பது குறித்து என் அறிக்கையில் குறிப்பிட்ட படி காவல்ஆய்வாளரிடம் நான் தெரிவித்தேன். ஆனால் அவர் எவ்வாறு எழுதினார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. இரத்தம்பட்ட பொருட்களை கைப்பற்றி அதை மூடி தனித்தனியாக S.H.O. சீல் வைக்கப்பட்டு எனக்கு அனுப்பபப்பட்டதா என்றால் சீல் வைத்து மரப்பெட்டியில் வைத்து அனுப்பபப்பட்டது. மேற்படி விபரம் குறித்து நான் விசாரணை அதிகாரியிடம் எதுவும் குறிப்பிட்டு சொன்னேனா என்று ஞாபகமில்லை. ஒவ்வொரு அயிட்டத்திலும் ஒரு இடத்தில் இருந்து இரத்தத்தை எடுத்து ஆய்வு செய்தேனா அல்லது பல இடங்களில் இருந்து இரத்தத்தை எடுத்து ஆய்வு செய்தேனா என்றால் பலஇடங்களில் இருந்து இரத்தத்தை எடுத்து ஆய்வு செய்தேன். உயிரியல் பகுப்பாய்வு 08.12.2014 அன்றும், குருதிவடிநீரியல் பகுப்பாய்வு 12.05.2015 அன்றும் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பகுப்பாய்விற்கு என்னுடைய மேலதிகாரியின் திருமதி.அன்னம்மாள் மேரி ஸ்டெல்லா மேற்பார்வையில் பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கினேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.